# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2073/19 - 2018 මැයි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.05.31

*2073/19 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், அமைச்சரவை உறுப்பினரல்லாத அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சருக்கு, அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (2) ஆம் உப உறுப்புரையின்வண்ணம் பொறுப்பளிக்கப்படும் அமைச்சும், அதன் விடயங்களும், பணிகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் 2018, மே மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இதன்கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சொல்லப்பட்ட அமைச்சின் விடயங்களும் பணிகளும், சொல்லப்பட்ட அமைச்சுக்குரிய திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் ஆகியனவும் இருக்குமென என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2018, மே 28.*

**அட்டவணை**

**தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| *1. இலங்கையின் அடையாளத்தை மேம்படுத்துவதற்காக தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கூடிய கொள்கைகளைத் தயாரித்தல்.* | *1. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக் கத்திற்கான அலுவலகம் (அமைச்சின் பணிகளைச் செயற்படுத்துவதற் கான நிறுவனமாகும்)* | *• காணாமற் போனோர் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டம் (2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கம்)* |


1A – G 27757 – 367 (2018/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 2. நிலைத்திருக்கும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்விற்குத் தேவையாகின்ற கொள்கைகளையும் செயற்பாடுகளையும் பற்றி அரச அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல். | 2. காணாமற் போனோர் பற்றிய அலுவலகம். | • வேறு அமைச்சரொருவரின் கீழ் கையளிக்கப்படாத இதன் I ஆம் II ஆம் நிரல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான ஏனைய அனைத்துச் சட்டங்களும். |
| 3. சமாதானத்தை கட்டியெழுப்பும் செயற்பாட்டின் போது எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல். | | |
| 4. அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும்போது அரச அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குதல். | | |
| 5. பேரினப் பங்களிப்புடனான ஒற்றுமைமிக்க சமூகத்தை உருவாக்குவதற்கும் சகவாழ்வை மேம்படுத்துவதற்காகவும் உரிய நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் தயாரித்தல். | | |
| 6. வெளிக்கள ரீதியில் செயற்படுத்தப்படும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளைக் கண்காணித்தலும் மதிப்பிடுதலும். | | |
| 7. பல்வேறு சமுதாயங்களுக்குள் மற்றும் அவற்றிற்கிடையில் ஏற்படக்கூடிய கருத்து முரண்பாடுகள் மற்றும் மோதல்களுக்கு காரணமாகும் விடயங்களைத் தீர்ப்பதற்கான செயன்முறைகளை அரசுக்கு | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| முன்மொழிதலும் அவற்றை செயற்படுத்தல், தொடராய்வு செய்தல். | | |
| 8. சமுதாயங்களினுள்ளும் அவற்றிற்கிடையிலும் மோதல் நிலைகள் ஏற்படக்கூடிய கடும் கருத்து முரண்பாடான சந்தர்ப்பங்களை அடையாளங்காணுதல், அத்தகைய சந்தர்ப்பங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான செயன்முறைகளை தயாரித்தலும் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தலும். | | |
| 9. மேலே 1 இன் கீழ் காட்டப்பட்ட கொள்கைகளுக்குட்பட்டு கல்வி, சட்ட, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார விடயங்களை உள்ளடக்கி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தலும் செயற்படுத்தலும் தொடராய்வு செய்தலும். | | |
| 10. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் மூலம் ஆரம்பிக்கப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக கருத்துக்கள் மற்றும் பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்கான அரச, வர்த்தக சமுதாயங்கள் மற்றும் அரசு சாராத பிரிவுகளுடன் கலந்துரையாடல்களை நடாத்துதல். | | |
| 11. தகுந்த திறமுறைகளைப் பயன்படுத்தி தேவைப்படுமாயின் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காக நிதிகளை திரட்டுதல். | | |
| 12. நிதிசார் உதவிகள் மற்றும் நிபுணத்துவ சேவைகளை | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டநிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச சமுதாயத்துடன் உறவுகளை கட்டியெழுப்புதல். | | |
| 13. தகுந்த திறமுறைகளைப் பயன்படுத்தி தேவைப்படுமாயின் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்காக நிதிகளை திரட்டுதல். | | |
| 14. 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க காணாமற் போனோர் பற்றிய அலுவலகம் (தாபித்தல், நிருவகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல்) சட்டத்திற்குரிய அனைத்து விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகள். | | |
| 15. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள மற்றைய அனைத்து விடயங்களும். | | |
| 16. நிரல் II ல் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களைக் கண்காணித்தல். | | |

06 - 619

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.